கொசுக்கடியிலிருந்து”, என்றான், “அப்படியானால் எங்கே கட்டவேண்டும்?” என்று கேட்டான் அந்த மனிதன். “கொசுவலைக்குக் கீழே” என்றார் அந்த மந்திரவாதி.

## 22. உப்பு அதிகம்

இரண்டு உடன்பிறந்தவர்கள் சோறு சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். இன்று சோற்றுடன் உண்ண என்ன குழம்பு என்று இருவருள் ஒருவன் கேட்டான். “இப்போதுதான் அடுப்பில் கருவாடு சுடப்படுகிறது. சுடப்படும் கருவாட்டை ஒருமுறை பாருங்கள், பின் ஒருவாய் சோற்றினை உண்ணுங்கள்” என்றார் தந்தை. சில நொடிகளில் “அப்பா, அப்பா, ஒருவாய் சோற்றுக்கு அண்ணன் இரண்டுமுறை கருவாட்டைப் பார்த்துவிட்டான்” என்று தம்பி தந்தையிடம் முறையிட்டான். “அதிக உப்பு அவனைக் கொன்றுவிடும்” என்று எச்சரித்தார் பிள்ளைகள் மீது அக்கறை கொண்ட தந்தை.

## 23. பரிசுப் பொருளாகப் பழைய ‘நாள்காட்டி’

புத்தாண்டு பிறப்பின்போது புத்தாண்டு பரிசினை ஒருவருக்கு மற்றொருவர் அனுப்பினார். அஞ்சல்காரனிடமிருந்து அப்பரிசினைப் பெற்றுக்கொண்ட வீட்டுக்காரர், அந்த

உள்ளே எட்டிப்பார்த்தான். பெண்கள் யாரும் உள்ளேயில்லை. கடன் வாங்கியவனே தன் விரல்களால் மூக்கைப் பொத்திக் கொண்டு பெண்குரலில் அந்த விடையைச் சொல்வதைக் கண்டான். சினம் கொண்ட அவன் பலகணியை உடைத்து உள்ளே சென்று கடன் வாங்கியவனை நையப் புடைத்தான். அப்போதும் அவன் அடியை வாங்கிய வண்ணம் “என் கணவர் கடன் வாங்கியதற்கு என்னை அடிக்கிறீர்களே?” என்று மூக்கைப் பொத்தியவாறு பெண்குரலில் மெல்லக் கேட்டான்.



திருமணம் ஒன்றினால் இரண்டு குடும்பங்கள் இணைக்கப்பட்டன. மணமகனின் தந்தை பெரும் செல்வர். அவர் (தன் சம்பந்தி) மணமகளின் தந்தையை வீட்டிற்கழைத்துத், தன் வீட்டிலுள்ள விலையுயர்ந்தப் பொருள்களையெல்லாம் காட்டிப் பெருமை பாராட்டிக் கொண்டார். பின்னர் “இதைப் போன்ற விலைமதிக்க முடியாத பொருள்கள் ஏதேனும் உங்களிடம் உண்டா?” என்று கேட்டார். “உங்களிடத்தில் உயிரற்றப் பொருள்கள்தான் இருக்கின்றன. இங்கு நான் வியப்படையும்படியாக ஒன்றுமில்லை. எங்கள் வீட்டில் விலையேறப்பெற்றதும் உயிருள்ளதுமான இரண்டு அற்புதமான கருவூலங்கள் வைத்திருக்கிறோம்” என்றார் மணமகளின் தந்தை.



தோன்றுகிறதோ” என்றான். “இல்லை; இல்லை நீங்கள் வேறுயாரையோ பார்த்துவிட்டு நான் என்று தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள்” என்றான் அந்த மற்ற விருந்தினன்.

அடுத்து வேறு வகை உணவுகள் பரிமாறப்பட்டபோது, மீண்டும் அந்த அண்ணாமலை உணவுண்ண பயன்படுத்தப்படும் கரண்டிகளை இங்குமங்கும் விரைவாக அசைத்து உண்ணத் தொடங்கினான். கவிழ்ந்த தலை நிமிராமல் அவன் தொடர்ந்து உண்பதைக்கண்ட மற்றொரு விருந்தினன் ஆமாம், நாம் முன்பே ஒரு முறை சந்தித்திருக்கிறோம். உண்மையென்னவெனில் அந்த விருந்தின்போது நீங்கள் எதிரில் இருப்பவர்களை ஏறிட்டுக்கூடப் பார்க்காமல் உணவு வகைகளில் வைத்த கண் வாங்காமல் குனிந்த வண்ணம் சாப்பிட்டதால், உங்கள் திருமுகத்தை என்னால் காணமுடியாமல் போய்விட்டது. மன்னிக்கவேண்டும்” என்று மறுமொழி பகர்ந்தான் அந்த மற்றுமொரு விருந்தினன்.

# 41. மறைவாக உண்ணும் விருந்தளிப்பவன்

விருந்தினர்கள் முற்றத்தில் அமர்ந்திருக்கும் போது வீட்டுக்காரன் உள்ளே சென்று முதன் முதலில் விருந்துணவை மறைவாகச் சுவைப்பதும் வழக்கம். ஒருமுறை விருந்தினர்களில் ஒருவன் வீட்டுக்காரன் உள்ளே சென்று மறைவாக விருந்துணவை

வாணி என்னும் பெயர் கொண்ட செல்வச் சீமாட்டி ஒருத்தியிருந்தாள். அவளுக்கு ஓர் ஆசை. தான் மறைந்ததும், தன் கல்லறையில் பொய்யாய்ச் சில புகழுறைகள் பொறிக்கப்பட வேண்டும் என்று விரும்பினாள். அப்படிப்பட்ட புனைந்துரையைப் புனைந்துவர் புலமையில் சிறந்த வித்தகன் ஒருவனிடம் வேண்டினாள். அவனும் எத்தனையோ தொடர்களை எழுதியெழுதிப் பார்த்து எவையும் பொருந்தாததால் இறுதியில் இவ்வாறு எழுதினான். “அரசுக் கல்லூரியில் புகழ்மிக்க முன்னாள் பேராசிரியரின் பக்கத்து வீட்டவளும், முன்னாள் நகர மேயரின் அடுத்த வீட்டவளுமாகிய திருமதி வாணி இங்கே ஓய்வு கொள்கிறார்”

## 62. எலிக்கும் ஈக்கும் இணக்கம் தெரிவித்தல்

எலியும், தேனீயும் இணைபிரியா உடன்பிறப்புகள் ஆயினர். அந்த இணைப்பில் இணைந்து கொள்ளும்படி பல்கலைக்கழகப் பட்டதாரி ஒருவர் அழைக்கப்பட்டார். அழைப்பிற்கு இணங்கி அக்கூட்டில் அவரும் ஓர் அங்கமானார்.

கூட்டில் முதலிடம் எலிக்கும், இரண்டாவது இடம் தேனீக்கும் மூன்றாவது இடம் பல்கலைக் கழகப் பட்டதாரிக்கும் வழங்கப்பட்டன. பட்டதாரி, எலிக்கும் தேனீக்கும் கீழாக மூன்றாவது இடம் கொடுக்கப்பட்டதைக் குறித்துக் கேட்டபோது, அந்தப்